1973 மார்ச் 28]

Assignment of lands in Payanur village

*543 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that pattas have been assigned to certain gazetted Police Officers working in Madras City in Payanur village, Chingleput district as landless individuals in October 1971; and

(*b*) if so, the details thereof and the basis on which such allotments were made?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : May I know whether any gazetted Police Officer has applied for a plot and got it which was meant for landless people, either in 1970–71 or in any part of the last three years? If so, whether any action has been taken against that particular official? May I know the name of the official also?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக 1967 இல் இதுபோல போலீஸ்காரருக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் நிலம் கொடுக்கப்பட்டதாக அரசுக்குத் தகவல் வந்தது. நிலம் பெறுவதற்கு அவர்கள் தகுதி இல்லை என்று சொல்லி கொடுத்த நிலத்தை அரசாங்கம் ரத்து செய்துவிட்டது.

Drought affected area of Dharapuram

*544 *Q.*—THIRU A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Revenue be pleased to state the improvements affected under the Special Rural Works Programme in the Chronic Drought areas included in the "Dharapuram Tract" viz. Sankari taluk, Tiruchengode taluk, Dharapuram taluk, Palani taluk and Udumalpet taluk?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எப்போதுமே வறட்சியால் பாதிக்கப் படுகிற பகுதிகளுக்கான மத்திய அரசு பொறுப்பேற்கும் சிறப்பு, கிராமப் பணிகள் திட்டம், சங்கரி, திருச்செங்கோடு, தாராபுரம், பழனி, உடுமலைப்பேட்டை ஆகிய வட்டங்களைக் கொண்ட தாராபுரம் பகுதியில் செயற்படுத்தப் படவில்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இம்மாதிரி நிரந்தரமான வறட்சி மிக்க பல பகுதிகளுக்கும் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற அரசு யோசிக்குமா?